# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
## நெறிமுறை உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு – 2023

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில், நெறிமுறை உதவியாளர் (தரம் III) பதவியில் உள்ள 06 வெற்றிடங்களை நிரப்ப பின்வரும் தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. ஆட்சேர்ப்பு முறை:**

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள், ஒரு எழுத்துத் தேர்விற்கும் நேர்முகத் தேர்விற்கும் தோற்றி, அவற்றில் பெற்ற மொத்த மதிப்பெண்களின் தரவரிசை மற்றும் தற்போதுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

**02. தேவையான தகுதிகள்:**

I. (அ) கல்வி/ தொழில் தகைமைகள்:

க.பொ.த (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில், கணிதம், சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழி /இலக்கியம் உள்ளிட்ட 06 பாடங்களில் 04 விசேட சித்திகளையும், க.பொ.த (உ .த) பரீட்சையில், குறைந்தபட்சம் ஒரு பாடத்திலேனும் (பொதுப்பரீட்சை தவிர்ந்த) தேர்ச்சி பெற்றறிருத்தல் வேண்டும்.

(ஆ) ஆங்கில மொழித் தேர்ச்சி, கணிணி அறிவு, வெளிநாட்டு மொழிகளிலுள்ள தேர்ச்சி, பதவிக்கான தொழில் தகைமைகள் மற்றும் குறித்த பதவி சார்ந்த அனுபவம் போன்றவை விசேட தகைமையாகக் கொள்ளப்படும் .

II. உடல் தகுதி:

(அ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும், இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் தகுதி பெற்றிருத்தல் வேண்டும் .
(ஆ) அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் உடல் திணிவுச்சுட்டெண் (BMI) 25-30 ஆகவிருத்தல் வேண்டும்.
(இ) ஆண் விண்ணப்பதாரர்களின் குறைந்தபட்ச உயரம் 5' 6''.

(ஈ) பெண் விண்ணப்பதாரர்களின் குறைந்தபட்ச உயரம் 5'2''.

III. ஏனையவை:

(அ) இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
(ஆ) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
(இ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்குள் இப்பதவிக்கான அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**03. சேவையில் ஈடுபடுவதற்கான விதிமுறைகள் மற்றும் சேவைக்கான நிபந்தனைகள்:**

I. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளின் அடிப்படையில், நெறிமுறை உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

II. இந்தப் பதவி நிரந்தரமானது, மற்றும் ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்பட்டது.

III. இந்நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. ஆட்சேர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் நெறிமுறை உதவியாளர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதிலிருந்து 03 ஆண்டுகளுக்குள், இந்த அலுவலர்கள் முதல் தடைதாண்டல் பரீட்சையில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

IV. 16.10.2020 திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல: 18/2020 இன்படி, உத்தியோகபூர்வ மொழி/மொழிகளில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

V. இந்நியமனமானது, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஸ்தாபன விதிக்கோவை, அரசாங்க நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் பிற திணைக்கள ஆணைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டதாகும்.

VI. எவராயினும் ஒரு பரீட்சார்த்தி, இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான தகுதிகள் அல்லது நிபந்தனைகள் அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்திற்குரிய தகுதிகள் எவற்றையும் பூர்த்தி செய்யவில்லை என்பது நிறுவப்பட்டாலோ அல்லது தவறான தகவல்களை வழங்கியிருந்தாலோ ஆட்சேர்ப்புக்குப் பின்னரேனும் கூட, அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

**04. வயதெல்லை:**

விண்ணப்பதாரர்கள் 18 வயது நிரம்பியவராக இருப்பதுடன், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியான 10.11.2023 அன்று 30 வயதை எட்டாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**05. சம்பள அளவுத்திட்டம்** :

இப்பதவி தொடர்பான பொதுநிர்வாக சுற்றறிக்கை எண்: 03/2016, திகதி 25.02.2016 இன் அட்டவணை I இலுள்ளவாறு, இப்பதவிக்கான மாதாந்த சம்பளம் பின்வருமாறு:

ரூ. 27,140 – 10 x 300 – 11 x 350 – 10 x 495 – 10 x 660 – 45,540 (MN1-2016) - மாதாந்த சம்பளம்

**06.** எழுத்துப் பரீட்சை :

I. இப்பரீட்சை கொழும்பில் நடத்தப்படும்.
II. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடத்தப்படும்.
III. ஒரு விண்ணப்பதாரர் மேலே குறிப்பிட்டுள்ள மொழிகளில் ஏதேனும் ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றலாம். அக்குறிப்பிட்ட மொழியில் மட்டுமே அவர் அனைத்து பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். கோரப்பட்ட மொழியில் பின்னதாக மேற்கொள்ளும் மாற்றங்கள் அனுமதிக்கப்படாது.
IV. எழுத்துப் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும்:

| வினாப்பத்திரம் | அதிகூடிய புள்ளிகள் | காலம் | சித்தி பெறுவதற்கான **புள்ளி**கள் |
|---|---|---|---|
| விடய ஆய்வு | 100 | 01 மணித்தியாலம் | 40% |
| நுண்ணறிவு மற்றும் மொழித்தேர்ச்சி | 100 | 01 மணித்தியாலம் | 40% |

V. எழுத்துப்பரீட்சைக்கான பாடத்திட்டம்:

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. விடய ஆய்வு | பரீட்சார்த்தியின் விவேகமான நடத்தை மற்றும் வேலை தொடர்பில் புத்திசாலித்தனமான தீர்மானமெடுக்கும் திறன் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்காக உருவாக்கப்பட்ட வினாப்பத்திரம். |
| 2. நுண்ணறிவு மற்றும் மொழித்தேர்ச்சி | **நுண்ணறிவுத்தேர்ச்சி**<br>பொது நுண்ணறிவு, தர்க்க ரீதியான திறன், யோசனைகளின் வெளிப்பாடு, எண் கணிதத்திறன், புரிந்துகொள்ளும் திறன் ஆகியவை மதிப்பீடு செய்யப்படும் வினாப்பத்திரம்<br>**மொழித்தேர்ச்சி**<br>துல்லியமாக, எழுத்துப்பிழையின்றி விடையளிக்கும் திறன், இலக்கணம், தெளிவான மற்றும் துல்லியமான வெளிப்பாடு, மொழிப் பயன்பாட்டிற்கான புரிதல், விடயத்தெளிவுடனான சுருக்கியெழுதும் திறன் ஆகியவை மதிப்பீடு செய்யப்படும். |

**07. தகைமை மதிப்பீட்டிற்கான நேர்முகத்தேர்வு:**

i. எழுத்துத் தேர்வில் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40 புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

ii. எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரர்களுக்குள், தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட இரண்டு மடங்கானோர், தகைமை மதிப்பீட்டிற்கான நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

iii. எழுத்துப்பரீட்சை மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகத்தேர்வு ஆகியவற்றில் பெறப்பட்ட மொத்த புள்ளிகளின் அடிப்படையில் தரவரிசை தயாரிக்கப்படும். தரவரிசை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் நியமனம் மேற்கொள்ளப்படும்.

iv. தகைமை மதிப்பீட்டு நேர்முகத்தேர்வில் புள்ளிகள் வழங்கப்படும் விதம் பின்வருமாறு:

| | புள்ளிகள் வழங்கப்படுவதற்கான அளவுகோல்கள் | அதிகபட்ச புள்ளிகள் | சித்தி பெறுவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| **1** | மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | |
| **2** | பதவியுடன் தொடர்புடைய தொழில்முறை தகைமைகள்<br><br>1. பாடசாலை மாணவர் படை/ சாரணர் குழு - (அதிகபட்ச புள்ளிகள் *05*)<br>பாடசாலை மாணவர் படை 05<br>சாரணர் குழு 05<br>ஏனைய விளையாட்டுக்கள் 05<br><br>2. விளையாட்டுக்கள்<br>(அதிகபட்ச புள்ளிகள் *10*)<br>சர்வதேச மட்டம் 10<br>தேசிய மட்டம் 10<br>மாகாண மட்டம் 05<br>பாடசாலை மட்டம் 03<br><br>• அதிகபட்ச தகுதி பெற்ற ஒரு விளையாட்டுப் பிரிவிற்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.<br>3. அரசியல் சாராத சமுதாய அமைப்புகளின்/ சங்கங்களின் அதிகார சபைகளில் அங்கத்துவம் (ஒரு வருடத்திற்கு 01 புள்ளி என, அதிகபட்ச புள்ளி 05 ) | 20 | 50 |
| **3** | ஆங்கில மொழித்தேர்ச்சி | 10 | |
| **4** | பதவி தொடர்பில் பெற்ற அனுபவம் | 10 | |
| **5** | கணிணி அறிவு | 10 | |
| **6** | சர்வதேச மொழிகளில் தேர்ச்சி | 10 | |
| **7** | அணுகுமுறை, முடிவெடுக்கும் திறன், தகவல் தொடர்பு திறன், சூழ்நிலை விழிப்புணர்வு மற்றும் ஆளுமை ஆகியவற்றை பரிசோதிப்பதற்காக, நேர்முகத்தேர்வுக் குழுவால் வழங்கப்படும் விடய அடிப்படையிலான விளக்கக்காட்சி முன்வைப்பு மற்றும்/அல்லது கேள்வி கேட்டல் | 25 | |
| **8** | **மொத்தம்** | 100 | |

**08. விண்ணப்பிக்கும் முறை:**

I. மாதிரி விண்ணப்ப படிவத்தின்படி, விண்ணப்பங்கள் A4 தாளில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தின் தலைப்பு எண்கள் 01 முதல் 06 வரை முதல் பக்கத்திலும் மீதமுள்ளவை இரண்டாவது மற்றும் மூன்றாவது பக்கங்களிலும் சேர்க்கப்படும் வகையில் விண்ணப்பம் தயாரிக்கப்படுதல் வேண்டும். A4 தாளின் இருபுறமும் பயன்படுத்தப்படுதல் வேண்டும் விண்ணப்பம் விண்ணப்பதாரரின் கையெழுத்தில் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தைத் தயாரிக்கும் போது, சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் பூர்த்திசெய்தமைக்கு மேலதிகமாக, பரீட்சையின் பெயரானது, விண்ணப்பத்தின் மேல் பகுதியில் ஆங்கிலத்திலும் எழுதப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்துப்போகாத விண்ணப்பங்கள் மற்றும் முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். நீங்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பத்தின் நகல்களை வைத்திருப்பது உதவியாக இருக்கும்.

II. விண்ணப்பமானது, பரீட்சார்த்தி தான் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழியில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

III. அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை அந்தந்த திணைக்களங்களின் /நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

IV. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 10.11.2023 அன்று, அல்லது அதற்கு முன்னதாக கிடைக்குமாறு, "செயலாளர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, குடியரசு கட்டிடம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் மேல் பக்க இடது மூலையில், "வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் நெறிமுறை உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு – (2023)" என்று தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

V. எல்லா வகையிலும் முழுமையடையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு விண்ணப்பமும் தொலைந்துவிட்டதாகவோ அல்லது பதவியில் தாமதமாகிவிட்டதாகவோ வரும் புகார்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

VI. பரீட்சார்த்தி ஒருவருக்கு தேர்வுக்கான அனுமதிச்சீட்டு வழங்கப்படுவதானது, அவர் தேர்வில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றவர் அல்லது அந்தப் பதவிக்குத் தகுதியானவர் என்ற ஒப்புதலாகக் கருதப்பட மாட்டாது.

**09. பரீட்சைக்கான அனுமதி**:

i. விண்ணப்பப் படிவம் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டை ஆகிய இரண்டிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். எந்தவொரு நிறுவனத்திலிருந்தும் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர், நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் கையொப்பம் பெற வேண்டும், இல்லையெனில் விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலர், கிராம சேவையாளர், ஒரு சமாதான நீதவான், சாத்தியப்பிரமாண அதிகாரி, சட்டத்தரணி, ஆணையாளர், வழக்கறிஞர், நொத்தாரிசு, முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, அல்லது மாகாண சிவில் சேவை அல்லது நிரந்தர ஊழியர் தர அதிகாரி அல்லது விஹாராதிபதி அல்லது பௌத்த விகாரையின் தலைவர் அல்லது வேறு மத வழிபாட்டு தலத்தின் பொறுப்பாளர் அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க பதவியை வகிக்கும் நபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தபடுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி, உறுதிப்படுத்தப்பட்ட கையொப்பத்துடனான தனது அனுமதி அட்டையை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறிய

விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை நடத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வகுத்துள்ள விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டவர்களாவர். இந்த விதிகளை மீறினால், பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் பொறுப்பாவார்.

ii. ஒரு விண்ணப்பதாரர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சையின் முதல் நாளில் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் தனது அனுமதி அட்டையை ஒப்படைத்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பு இந்த வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

**10. பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்:**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தோன்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் கண்காணிப்பாளரின் திருப்திக்கு ஏற்ப அவர்களின் ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை

II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

III. செல்லுபடியாகும் இலங்கை வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்

மேலும், பரீட்சார்த்திகள் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும், வகையில் முகம் மற்றும் காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். தங்கள் அடையாளத்தை நிரூபிக்க தவறும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல், பரீட்சை முடிந்து வெளியேறும் வரை, பரீட்சை நடாத்தும் அதிகாரிகள் அவரை அடையாளம் காணும் வகையில், விண்ணப்பதாரர் தொடர்ந்தும் தனது முகம் மற்றும் காதுகளை மூடாமலிருத்தல் வேண்டும்.

**11. தவறான தகவல்களை வழங்குதல்**

ஆட்சேர்ப்புக்கு முன் விண்ணப்பதாரர் அனுப்பிய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் தவறானது அல்லது போலியானது எனக் கண்டறியப்பட்டால், அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஆட்சேர்ப்புக்குப் பின்னர் இதுபோன்ற தவறான அல்லது போலியான தகவல்கள் கண்டறியப்பட்டால், விண்ணப்பதாரி, பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணிநீக்கம் செய்யப்படுவார்.

**12.** இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத விடயம் ஏதேனும் இருப்பின் அது தொடர்பான இறுதித் தீர்மானம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் உத்தரவின்படி மேற்கொள்ளப்படும். அத்துடன், வெற்றிடங்களை நிரப்புவதா அல்லது வெற்றிடங்களின் ஒரு பகுதியை நிரப்புவதா அல்லது வெற்றிடங்களை நிரப்பாமல் விடுவதா என்பது குறித்த இறுதி முடிவு எடுக்கும் உரிமை, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாருக்கு உண்டு .

**13.** இந்த அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புக்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு இருந்தால், சிங்கள மொழி உரையே மேலோங்கும்.

ஏ.வை. விஜேவர்தன
செயலாளர்
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
குடியரசு கட்டிடம், கொழும்பு 01
29.10.2023